Registered Office:
" Maithri "
132, Cathedral Road,
Chennai 600 086.
India.
CIN : L63011TN2004PLC054948

Tel : 91 44 2811 2472
Fax : 91 44 2811 2449
URL : www.ranegroup.com

# Rane Brake Lining Limited

**//Online Submission//**

RBL/SE/076/2024-25

December 04, 2024

| | |
|---|---|
| **BSE Limited**<br>Listing Centre<br>Scrip Code: **532987** | **National Stock Exchange of India Ltd.**<br>NEAPS<br>Symbol: **RBL** |

Dear Sir / Madam,

**Sub: Newspaper advertisement for the transfer of Equity shares to IEPF - Regulation 47 of SEBI LODR**

We hereby enclose copies of the notice to shareholders of the Company published on December 04, 2024, in the newspapers, viz., 'Business Standard' (English) and 'Hindu Tamizh Thisai' (Regional language) published.

The notice to shareholders is in respect of the proposed transfer of equity shares to the Investor Education and Protection Fund Authority (IEPF), in accordance with Rule 6 of the IEPF Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016 and amendments thereof.

We request you to take the above on record and note the compliance under relevant provisions of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR).

Thanking you,

Yours faithfully,

For **Rane Brake Lining Limited**

VENKATRAMAN Digitally signed by VENKATRAMAN Date: 2024.12.04 11:29:24 +05'30'

**Venkatraman**
Secretary

Encl: a/a

Newspaper: Business Standard
Language: English
Edition: All editions
Date of Publication: December 04, 2024

# Adani Energy preferred bidder for HVDC transmission project

## Roughly ₹25,000 crore bid poised to be company's largest order win ever

AMRITHA PILLAY
Mumbai, 3 December

Adani Energy Solutions (AESL) is the preferred bidder for a transmission system project housed under Rajasthan Part-I Power Transmission, according to people in the know.


The roughly ₹25,000 crore project reportedly will be AESL's largest order win ever, once formally awarded. As of September, according to AESL's media statement, its under-construction project pipeline for transmission was worth ₹27,300 crore and comprised 12 projects. The preferred bid under TBCB (tariff-based competitive bidding) — is for an interstate transmission system (ISTS) termed as "Transmission system for evacuation of power from REZ in Rajasthan (20 Gw) under Phase-III Part-I" and is housed under project SPV (special purpose vehicle) "Rajasthan Part-I Power Transmission Ltd".

This was a re-tender process, after the earlier tendering process was annulled for undisclosed reasons. As per REC Power Development and Consultancy (RECPDCL) website, Power Grid Corporation of India (PGCIL), Sterlite Power, and Indigrid were other qualified bidders for this project.

"The project includes setting up 6 Gw HVDC (high-voltage direct current) terminal stations at Bhadla (Rajasthan) and Fatehpur (UP), transmission line and associated AC network between the two stations," said the person earlier quoted. An email query sent to AESL remained unanswered.

AESL informs exchanges on project wins on transfer of SPVs. The company's last such disclosure was in November. AESL then said it has executed a share purchase agreement (SPA) with PFC Consulting Limited for Pune-III Transmission for evacuation of 7 Gw of renewable energy (RE) from Khavda RE Park, under Phase-IV Part-D package.

In a recent investor call, Kandarp Patel, chief executive officer (CEO) of AESL, noted that the company was confident of winning projects worth ₹15,000-20,000 crore over the next six months on the back of ₹85,000 crore worth of project bids in the pipeline.



**POWER PLAY**

- Power Grid Corporation of India, Sterlite Power, and Indigrid, were other qualified bidders for this project
- As of September, AESL's under construction project pipeline was worth ₹27,300 crore and comprised 12 projects

## Adani group on better financial footing now, asserts Bernstein



The Adani group in the last two years improved its net debt to earnings before interest, taxes, depreciation, and amortisation (ebitda) ratio and cash reserves as gross debt grew, according to global financial services firm Bernstein. Net debt to ebitda ratio improved to 2.7 in September 2024 against 4.4 in March 2023, with improvements by Adani Green, Adani Transmission and Adani Power, "primarily due to a rise in ebitda as assets got operational across the group, fundraising and even profitability improved." The group in September 2024 had a cash reserve of ₹39,000 crore, 75 per cent more against ₹22,300 crore in March 2023. Gross debt rose to ₹279,300 crore in September 2024, after falling from ₹241,000 crore in March 2023 to ₹238,500 crore in September 2023 after US short-seller Hindenburg's critical report of the conglomerate earlier. The rise is primarily driven by Adani Enterprises, whose gross debt stood at ₹804,00 crore in September 2024 against ₹571,00 crore in September 2023. The group has over the years has shifted away from banks to bonds. Since March 2023, however, the share of dollar bonds has decreased and that of Indian non-banking financial services has increased in the source of funds. PRACHI PISAL

## Work on Lanka port in progress

Work on a Sri Lankan port's expansion led by the Adani group is progressing as scheduled, a top local official said, even as the fate of $553 million in American funding for the project remains uncertain following the indictment of the Indian conglomerate's executives in the US. Construction at the Colombo West International Terminal remains ongoing, with phase one of the project still set for completion in early 2025, said Sirimevan Ranasinghe, chairman of the Sri Lanka Ports Authority, a minority shareholder in the project. "We are continuing as per our agreement," Ranasinghe told *Bloomberg News*. He said the US financing had not been finalised and declined to comment further on its status, adding that it was up to the joint-venture company developing the project to secure financing. BLOOMBERG

# Flush with funds, qcoms eye expansion

ARYAMAN GUPTA
New Delhi, 3 December

Flush with funds and amid intensifying competition in the sector, quick commerce (qcom) companies like Swiggy Instamart, Zomato-owned Blinkit, and Zepto, have shifted into expansion mode.

While announcing its September-quarter results, management at Swiggy said its growth strategy for Instamart is based on hyperlocal expansion – same store growth and densification in existing cities, and geographic expansion – launching new cities.

"Instamart is rapidly growing its geographical footprint, and is now available in 54 cities (versus 27 cities in March '24)... We plan to double our store count by March '25 (versus 523 in March '24), while increasing the average size of our stores by 30-35 per cent," said the management at Swiggy in a letter to shareholders.


The company is replacing some of its older, small-format stores (2,500-2,800 sq ft) with larger ones (3,500-4,500 sq ft) that can house up to 20,000 stock-keeping units (SKUs). Additionally, Swiggy is rolling out 'megapods' (8,000-10,000 sq ft) in top cities, which can house over 50,000 SKUs.

These megapods will serve consumers in 10 to 30 minutes with an extended selection of items beyond the top 20,000 SKUs.

"Overall, we expect to more than double our active dark store area to 4 million sq ft by March '25 (versus 1.5 million sq ft in March '24), through a combination of new store additions and larger-sized stores," the management said.

The expanded dark store area with a larger selection is expected to lead to a higher share of user spends, and expansion of average order value (AOV). According to Swiggy, its AOV has grown by 7.3 per cent in H1FY25, with expectations of double-digit growth annually for the foreseeable future.

Meanwhile, qcom major Zepto has also fast-tracked its expansion plans. "We are in expansion mode right now," Zepto CEO Aadit Palicha told *Business Standard* last week. Their Gurugram-based listed rival Zomato is also scaling its dark store footprint rapidly.




# Hyundai ties up with 3 IITs for battery, electrification research

Hyundai Motor group on Tuesday announced partnerships with three Indian Institutes of Technology (IITs) to establish a research system in the fields of batteries and electrification.

The institutes include IIT Delhi, IIT Bombay, and IIT Madras.



The Hyundai Center of Excellence (CoE), which will be set up within IIT Delhi, will operate through sponsorships from Hyundai. The primary objective of the Hyundai CoE is to take the lead in driving advancements in batteries and electrification, specifically designed to meet the unique requirements of the Indian market.

The firm officials, along with IIT representatives, including Prof Rangan Banerjee, director at IIT Delhi, dean Sachin C. Patwardhan at IIT Bombay and dean Manu Santhanam at IIT Madras, attended a ceremony at IIT Delhi where they signed an agreement for the joint establishment of the 'Hyundai Motor Group-IIT Hyundai CoE.'

Hyundai Motor group plans to invest around $7 million over five years, from 2025 to 2029, to jointly conduct battery and electrification-related research with the three IIT universities. BS REPORTER

# TKIL makes green foray with investment in Swiss firm

AMRITHA PILLAY
Mumbai, 3 December

TKIL Industries (formerly known as Thyssenkrupp Industries India) on Tuesday said it has made a strategic investment for a stake in SoHHytec SA, based in Lausanne, Switzerland for an undisclosed amount.

In addition, TKIL said it will be the exclusive partner in India for SoHHytec to manufacture and supply specific equipment and machinery as well as implement and install green hydrogen projects.

TKIL looks to start with a 100 megawatt scale, and further increase it to a gigascale in five years time. Company executives noted a gigascale up will entail an investment of ₹1,500-2,000 crore.

In its press statement, TKIL said, SoHHytec is an innovator and solutions provider in the green hydrogen field using its proprietary artificial photosynthesis technology, to produce green hydrogen from renewable energy sources, including solar and wind, for industrial uses.

Company executives noted the technology helps set an electrolysis unit, both in on-grid and off-grid locations, a first of its kind in India.

Vivek Bhatia, managing director and chief executive officer, TKIL, said the company is ready to take orders, with a 12-month delivery time.

"The market response has been fantastic and we are confident of announcing our first orders shortly," he added.

Bhatia noted the company is open to customer demands, spanning engineering, procurement and construction of these electrolyser units, and extending to operation and maintenance and other long-term arrangements.

The green hydrogen produced will serve industrial sectors such as steel, fertilisers, bio-chemicals, cement, and transportation— industries essential to India's energy transition and industrial decarbonisation goals.

TKIL executives said it will produce these units from its current locations. Also, the company is in dialogue with several states for favourable policy measures to set up units.




# 'India leads in AI upskilling'

2025 will be a crucial year for Udemy in India. **CAOIMHE CARLOS**, vice-president of global customer success at Udemy, during her first-ever visit to the country, says the company will hire its India head of customer success, expand its research and development (R&D) centre to enhance Udemy's core platform, and add more artificial intelligence (AI) features. Carlos discusses with **Shivani Shinde** in Mumbai the trends in upskilling the Indian market. Excerpts:

**What are some of the trends you see globally in upskilling and reskilling, and how is the Indian market different?**

The past three years have been dominated by technology upskilling, particularly focused on generative AI (GenAI). We enrol eight people every minute in a GenAI course on our platform. The demand has been unprecedented. Over the past 12 months, however, we've noticed a shift in how GenAI is being consumed. Two years ago, the focus was on building large language models, understanding the technology, and engaging in deep technical upskilling. Now, the trend — true for India as well — shows that employees are increasingly figuring out how to use GenAI in their day-to-day jobs to improve productivity. India leads globally in AI upskilling. The demand for GenAI technology skills here is enormous.

Another trend complementing this is the rising demand for soft skills or more human-centric skills. Surprisingly, we've seen an increased demand for skills such as communication, critical thinking, and creativity. We conducted external research and found that corporate learners and employees are actively focusing on human skills to gain a competitive edge in a technologically driven world. While these are global trends, they hold for India as well.

The rise in demand for soft skills can also be attributed to the influx of GenZ into the workforce. Many of them completed their studies during the pandemic or started their first jobs then, so they haven't had the same opportunities to hone their soft skills as their predecessors did.



**Q&A**

CAOIMHE CARLOS
Vice-President, Global Customer Success, Udemy

**How are enterprises dealing with the AI upskilling phenomenon?**

On a strategic level, organisations are grappling with how to address urgent skill gaps in their workforce to keep up with rapid technological changes. McKinsey has noted that the half-life of many skills has shortened from four years to just two and a half years. This means that the skills employees are trained in now may become obsolete by the time the training is fully implemented.

Most large enterprises are now trying to keep up with this change. They need to continuously upskill employees as new technologies emerge. This is perhaps the first technology trend where organisations are skilling nearly every employee simultaneously. We've never seen this before.

**How big is the Indian market for Udemy, and how is India different from other geographies?**

India is the only market where I never have to address low adoption rates. The appetite for learning here is incredible, especially among corporate employees. People are highly focused on acquiring skills that will help them succeed in their roles and advance their careers. In terms of usage and adoption, India is no. 1 globally for Udemy. In terms of size and volume, it ranks second. Our total user base in India is 16 million as of September 30, 2024, and it continues to grow steadily.

Unlike other educational technology platforms, Udemy operates as a marketplace, connecting experts with learners at scale. We have 75,000 instructors teaching on our platform and 73 million learners globally, including both corporate and individual users.

**GAYATRI HIGHWAYS LIMITED**

GAYATRI

Regd office: 5th Floor, A- Block, TSR Towers, 6-3-1090, Rajbhavan Road, Somajiguda, Hyderabad-500082, Telangana. Tel: 040-40024262 Email: cs@gayatrihighways.com
Web: www.gayatrihighways.com CIN: L45100TG2006PLC052146

**NOTICE OF POSTAL BALLOT**

Notice is hereby given pursuant to Section 108, Section 110 and all other applicable provisions, if any, of the Companies Act, 2013 ("**the Act**") read with Rule 20 and 22 of the Companies (Management and Administration) Rules, 2014, read with MCA General Circular No.09/2024 dated September 19, 2024 and SEBI Circular No.SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133, dated October 3, 2024 read with Regulation 44 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 and Secretarial Standards on General Meetings (SS-2) including any statutory modification or re-enactment thereof for the time being in force and pursuant to other applicable laws and regulations, that the Resolutions are proposed to be passed by the Members of the Company through postal ballot by remote e-voting process ("**E-Voting**") for seeking approval of Members of the Company for 1) Approval of Material Related Party Transaction(s) between Gayatri Highways Limited and HKR Roadways Limited, an associate Company and 2) Approval for Relinquishment of Rights held by the Company in Sai Maatarini Tollways Limited (SMTL), a Material Subsidiary of the company as detailed in the Notice of Postal Ballot dated 30th November, 2024.

On Tuesday, the 3rd December, 2024, the Company has sent the Notice of Postal Ballot along with the Login ID and password to the Members for e-voting who have registered their e-mail id's with Depository Participant(s) or with the Company;

The Board of Directors of the Company have appointed M/s. V. Shankar & Co., Practising Company Secretaries (CP No.8446) as the Scrutinizer for conducting the Postal Ballot process.

Members are requested to provide their assent or dissent through e-voting only. The Company has appointed KFin Technologies Limited for providing e-voting facility to enable the Members to cast their votes electronically. The detailed procedure for e-voting is provided in the Notice of Postal Ballot. Members are requested to note that the e-voting shall commence from9:00 Hours (IST) on Saturday, the 7th December, 2024 and ends on Sunday, the 5thJanuary, 2025 at 17:00 Hours (IST). The e-voting module shall be disabled by KFin for voting thereafter.

In accordance with the above mentioned Circulars, physical copies of the Notice of Postal Ballot along with Postal Ballot Forms and Pre-paid Business Reply Envelope will not be sent to the Members. The communication of the assent or dissent of the Members would take place through the remote e-voting system only.

The voting rights of Members shall be reckoned as on Friday, the 29th November, 2024 which is the cut-off date. A person who becomes a Member after the Cut-off date shall treat this notice for information purpose only. The copy of the Postal Ballot Notice is available on the Company's website at www.gayatrihighways.com, websites of the Stock Exchanges i.e., BSE Limited and National Stock Exchange of India Limited at www.bseindia.com and www.nseindia.com respectively and on the website of https://evoting.kfintech.com. Members who have not received the Postal Ballot Notice may download it from the above mentioned websites or write to the Company at cs@gayatrihighways.com

Please note that the voting after 17:00 Hours on 5thJanuary, 2025 will not be valid and also shall not be allowed beyond the said date.

Members holding shares in physical mode and who have not updated their email addresses with the Company are requested to update their email addresses by writing to the Company at cs@gayatrihighways.com or evoting@kfintech.com (KFin Technologies Limited) along with the copy of the signed request letter mentioning the name and address of the Member, self-attested copy of the PAN card and self-attested copy of any document i.e., Driving License or Election Identity Card or Passport or Aadhar Card in support of the address of the Member. Members holding shares in dematerilised mode are requested to register / update their email addresses with the Depository Participants with whom they are maintaining Demat Accounts. In case of any queries / difficulties in registering the e-mail address, Members may write to cs@gayatrihighways.com or evoting@kfintech.com (KFin Technologies Limited).

The resolution if approved, shall be deemed to have been passed on the last date of e-voting i.e., Sunday, 5thJanuary, 2025. The result of e-voting will be announced on or before Tuesday, 7thJanuary, 2025 and will be displayed on the Company's Website www.gayatrihighways.com and communicated to BSE Limited and National Stock Exchange of India Limited.

In case of any queries, you may refer the Frequently Asked Questions (FAQs) for shareholders and e-voting User Manual for shareholders available at the download section of https://evoting.kfintech.com. In case of any queries / concern / grievances, you may contact Mr. Ganesh Chandra Patro, Asst. Vice President, KFin, Selenium, Tower B, Plot 31 & 32, Gachibowli, Nanakramguda, Serilingampally Mandal, Hyderabad - 500032, India, at email: einward.ris@kfintech.com or 1-800-309-4001 (toll free).

By order of the Board
For GAYATRI HIGHWAYS LIMITED
Sd/-
P. Raj Kumar
Company Secretary
M.No.A23289

Place : Hyderabad
Date : 3rd December, 2024

**APPOINTMENTS**

नैनीताल बैंक
दि नैनीताल बैंक लि.
**NAINITAL BANK**
THE NAINITAL BANK LTD.
CIN No.-U65923UR1922PLC000234
(Regd. Office: G.B. Pant Road, Nainital)
(A Premier Scheduled Commercial Bank & an Associate of Bank of Baroda)

**REQUIRES**

**1) CUSTOMER SERVICE ASSOCIATE : 25 Nos.**

**Registration start date: 4th December, 2024**
**Last Date for Registration: 22 December, 2024**

For other details such as Eligibility Criteria, Age, Qualification, Experience Pay Scale, Application Form & other relevant details etc. please visit us at *www.nainitalbank.co.in*

Place : Nainital Date : 04.12.2024 **VICE PRESIDENT, HRM & LAW**

**Advertisement No. 120/ 2024**

Government of India
Public Enterprises Selection Board
invites applications for the post of

**Director (Corporate Planning & Personnel)**

in

**Garden Reach Shipbuilders & Engineers Limited (GRSE)**

Last date of submission of application by applicants
**is by 15.00 hrs. on 25th December, 2024**
Last date of forwarding of applications
by the Nodal Officers to PESB
**is by 15.00 hrs. on 03rd January, 2025**
For details login to website
**https://pesb.gov.in**

**Rane Brake Lining Limited**
CIN No.L63011TN2004PLC054948
Regd. Office : " MAITHRI ", 132, Cathedral Road, Chennai - 600 086
www.ranegroup.com; e-mail: investorservices@ranegroup.com; Tel.: 044 28112472 / 73

**NOTICE OF COMPULSORY TRANSFER OF EQUITY SHARES TO IEPF**

NOTICE is hereby given pursuant to the provisions of Section 124 (6) of the Companies Act, 2013 read with the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016 ("the Rules") that, the Company is required to transfer by way of transmission all shares in respect of which dividend has not been paid or claimed by the shareholder for seven consecutive years or more to the Investor Education and Protection Fund Authority (IEPF).

Complying with requirements set out in the Rules, individual communications are being sent to the concerned shareholders whose dividend remain unclaimed and shares are due for transfer and details of such shareholders along with number of shares, are being uploaded on the website www.ranegroup.com. Shareholders are requested to verify the details of un-encashed dividends and shares liable to be transferred to the IEPF Authority.

The **unpaid/unclaimed dividend for the Financial year 2017-18 (Interim) and corresponding shares** are due for transfer within thirty days after **March 06, 2025.** Accordingly, concerned share holder(s) are requested to make an application to the Company/ Company's Registrar and Transfer Agent (RTA) well in advance before the said date, to enable processing of claims.

The Company shall proceed to initiate corporate action for transfer of shares to the IEPF Authority in respect of such shares without any further notice by following the due process in the rules as under:

i) Shares held in demat mode: by transfer of shares directly to demat account of the IEPF Authority;

ii) Shares held in physical mode: by issuance of new share certificates and thereafter converting it into demat and transferring to the demat account of the IEPF Authority.

The shareholders may note that the details uploaded by the Company on its website should be regarded and shall be deemed to be an adequate notice in respect of issue of new share certificate(s) by the Company for the purpose of transfer of shares to the IEPF Authority pursuant to the Rules. No Claim shall lie against the Company in respect of unclaimed dividend amount and shares transferred to IEPF pursuant to the said Rules. Both the unclaimed dividend and corresponding shares transferred to the account of the IEPF Authority including all benefits accruing on such shares, if any, can be claimed back from the IEPF Authority after following the procedure prescribed in the Rules.

Shareholders having any queries on the subject matter, may contact the Company's Registrar and Transfer Agent M/s. Integrated Registry Management Services Private Limited (SEBI Registration No. INR000000544), II Floor, Kences Towers, No. 1 Ramakrishna Street, T Nagar, Chennai - 600 017, Tel – 044 – 28140801 – 03, e-mail – srirams@integratedindia.in

For Rane Brake Lining Limited
Venkatraman
Secretary

Place : Chennai
Date : December 03, 2024

Newspaper: Hindu Tamizh Thisai
Language: Tamil
Edition: Chennai
Date of Publication: December 04, 2024



**பொன்மொழி**

உங்களுக்கு ஒரு நல்ல மனைவி அமைய வேண்டுமென்றால், ஒருவருக்கு நல்ல மகளாக வாழும் ஒருவரை திருமணம் செய்துகொள்ளுங்கள்.

▶ தாமஸ் புல்லர்

**இணையம்**

நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளுக்கு தேவையான உணவு, மருந்து பொருட்கள், உடை, விளையாட்டு பொருட்கள், படுக்கைகள், பயிற்சிக்கான சாதனங்கள் போன்றவற்றை ஆன்லைனில் வாங்க சூப்பர்டெய்ல்ஸ் (https://supertails.com/) ஏற்ற தளமாகும். இதில் செல்லப் பிராணிகளின் இனத்துக்கு ஏற்ப பொருட்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. லைட்னிங் டீல், மெகா பார்மசி சேல் போன்றவை மூலமும் வாங்க முடியும்.

**பொதுஅறிவு**

இந்திய தண்டனை சட்டத்தில் சட்டப்பிரிவு 497 என்பது திருமண உறவுக்கு வெளியே பாலியல் உறவு கொள்வோருக்கு தண்டனை வழங்கும் சட்டமாகும். ஒரு பெண், தனது கணவரின் அனுமதியில்லாமல் வேறு ஓர் ஆணுடன் திருமணத்துக்கு அப்பாற்பட்டு உறவு கொண்டால் அது தண்டனைக்குரிய குற்றம் என்று 497-ம் பிரிவு கூறுகிறது. ஆனால், ஆண் மட்டுமே தண்டிக்கப்படுவார். இந்த சட்டப் பிரிவை 2018 செப்.27-ல் உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

5 முறை வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பிறகே

## சாத்தனூர் அணையில் இருந்து படிப்படியாக நீர் வெளியேற்றம்

**எதிர்க்கட்சிகள் அவதூறு பரப்புவதாக அமைச்சர் துரைமுருகன் குற்றச்சாட்டு**

■ சென்னை

சாத்தனூர் அணையின் நிலை குறித்து 5 முறை வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்ட பிறகே படிப்படியாக நீர் வெளியேற்றப்பட்டது. ஆனால் எதிர்க்கட்சியினர் அவதூறு பரப்பி வருகின்றனர் என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையில் இருந்து முன்னறிவிப்பு இல்லாமல், திடீரென விநாடிக்கு 1.68 லட்சம் கனஅடி தண்ணீரை வெளியேற்றியதால் 4 மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர் என உண்மைக்கு மாறான தகவல் பரப்பப்படுகிறது.

ஃபெஞ்சல் புயல் காரணமாக நீர்பிடிப்புப் பகுதிகளில் பெரும் மழைப்பொழிவு இருந்ததால் சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து, அணையின் முழு கொள்ளளவான 119 அடியை நெருங்கியது. தண்ணீர் வரத்தை முன்கூட்டியே கணித்து, அணையின் பாதுகாப்பு கருதி, அணைக்கு வந்த தண்ணீர், தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்பட்டது.

சாத்தனூர் அணையின் உதவி செயற்பொறியாளர், அணைக்கு வரும் நீரின் அளவை தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது எச்சரிக்கைகளையும் செய்து வந்தார். அது அரசின் கவனத்துக்கு வந்து, உடனே முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டன. பெருமழை தொடர்ந்து பெய்ததைத் தொடர்ந்து நீர்வரத்து அதிகமானதால் 5-வது வெள்ள அபாய எச்சரிக்கை டிச.2-ம் தேதி முற்பகல் 2.45 மணிக்கு விடப்பட்டு விநாடிக்கு 1,80,000 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது.

ஆனால், அதிகப்படியான மழையின் காரணத்தைப் புரிந்து கொள்ளாமல் எதிர்க்கட்சியினர் பொய்யான தகவலைப் பரப்புகின்றனர். பெரு மழையால் சாத்தனூர் அணைக்கு ஆபத்து ஏற்படாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு செயல்பட்டது.

**உயிர் சேதம் தவிர்ப்பு**

5-வது முன்னெச்சரிக்கை அளவாக விநாடிக்கு 1,80,000 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டதற்கான காரணத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். 4-வது மற்றும் 5-வது முன்னெச்சரிக்கை விடப்பட்ட இடைப்பட்ட நள்ளிரவு நேரத்தில் கணிக்க முடியாத அளவுக்கு அணைக்கு நீர் வந்து கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் அணையில் இருந்து 1,80,000 கனஅடி தண்ணீரை திறந்துவிடாமல் போயிருந்தால், அணைக்கு பெரிய ஆபத்து ஏற்பட்டு 7 டி.எம்.சி தண்ணீரும் வெளியேறியிருக்கும். அதனால் ஏற்படும் பாதிப்புகள் எல்லாம் கணக்கில் அடங்காது. ஆறாத துயரமாக அது மாறியிருக்கும்.

பெருமளவில் ஏற்பட இருந்த உயிர் இழப்புகளை மிகச் சாதுர்யமாகச் செயல்பட்டு, மக்களை அரசு பாதுகாத்திருக்கிறது என்பதை நீர் மேலாண்மை, அணை பாதுகாப்பியல் வல்லுநர்களுக்கு புரியும். நிலைமையை அரசு சரியாகக் கணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொண்டதால்தான் பெரும் உயிரிழப்புகள் தடுக்கப்பட்டன. வீடுகள், விவசாய நிலங்கள் மட்டுமேதான் வெள்ள நீரில் மூழ்கியது.

இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் உயிர்கள் விஷயத்திலும் எதிர்க்கட்சிகள் மனசாட்சியை அடகு வைத்துவிட்டு அவதூறுகளை மட்டுமே அள்ளி வீசுகின்றன. பொய்கள் என்றுமே விலை போகாது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜாபர் சாதிக்கை கட்சியில் இருந்து நீக்கிவிட்டதாக கூறி

## பொறுப்பை தட்டிக்கழித்து உண்மையை மறைக்க முடியாது

**ஆர்.எஸ்.பாரதி தொடர்ந்த வழக்கில் இபிஎஸ் பதில் மனு**

■ சென்னை

ஜாபர் சாதிக்கை கட்சியில் இருந்து நீக்கிவிட்டதாகக் கூறி பொறுப்பை தட்டிக்கழித்து உண்மையை மறைக்க முடியாது என ரூ.1 கோடி இழப்பீடு கேட்டு ஆர்.எஸ்.பாரதி தொடர்ந்த வழக்கில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் திரைப்படத் தயாரிப்பாளரான ஜாபர் சாதிக்கை டெல்லி போதைப்பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீஸார் கடந்த மார்ச் மாதம் கைது செய்தனர். பின்னர் சட்டவிரோதப் பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக ஜாபர் சாதிக்கை அமலாக்கத் துறை அதிகாரிகளும் கைது செய்து புழல் சிறையில் அடைத்துள்ளனர்.

இந்நிலையில் ஜாபர் சாதிக்கை திமுகவுடன் தொடர்புபடுத்தி அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளதாகக் கூறி, ரூ.1 கோடி இழப்பீடு கோரி பழனிசாமிக்கு எதிராக திமுக தரப்பில் ஆர்.எஸ்.பாரதி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன்பாக விசாரணைக்கு வந்தது.

**விழிப்புணர்வு ஏற்படுத்த...**

அப்போது பழனிசாமி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயணன் தாக்கல் செய்த பதில்மனுவில், "தமிழகத்தில் போதைப் பொருள் பயன்பாடு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுத்தளத்தில் இருந்த தகவல்களின் அடிப்படையில் அந்த தகவலை பதிவிட்டு இருந்தேன்.

எனக்கு எதிராக கறை படிந்த கரங்களுடன் ஆர்.எஸ்.பாரதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஏற்கெனவே திமுகவில் அங்கம் வகித்த ஜாபர் சாதிக்கை கட்சியில் இருந்து நீக்கிவிட்டதாகக் கூறி பொறுப்பைத் தட்டிகழிக்க முடியாது. உண்மையை மறைக்க முடியாது.

தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டத்தை கண்காணிக்க உயர் நீதிமன்றமே குழுவை அமைத்துள்ள நிலையில் அரசின் செயல்படாத தன்மையை சுட்டிக்காட்டுவது அவதூறு ஆகாது.

திமுக நிர்வாகிகள் சிலர் தொடர்ச்சியாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக செய்திகள் வெளியானதில், அவ்வாறு நான் கூறியதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. தனிமனித பேச்சு சுதந்திரத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை அதிகபட்ச அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும்" என அதில் கோரப்பட்டிருந்தது.

அதையடுத்து நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், இந்த வழக்கு விசாரணையை டிச.17-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளார்.

போதை பொருள் வழக்கில்

## நடிகர் மன்சூர் அலிகான் மகன் கைது

■ சென்னை

போதைப் பொருள் வழக்கில் நடிகர் மன்சூர் அலிகானின் மகன் கைது செய்யப்பட்டார்.

போதைப் பொருள் ஒழிப்பில் சென்னை போலீஸார் தீவிரம் காட்டி வருகின்றனர். அந்த வகையில், சென்னை முகப்பேர் பகுதியில் உள்ள தனியார் கல்லூரி மாணவர்களுக்கு செல்போன் செயலி மூலம் போதை பொருட்கள் விற்பனை செய்த வழக்கு தொடர்பாக கடந்த மாதம் கல்லூரி மாணவர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கொடுத்த தகவல்படி, மண்ணடியைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கைதாகினர்.

இவர்கள் ஆந்திராவில் இருந்து கஞ்சாவை வாங்கிவந்து, காட்டாங்கொளத்தூர் பகுதியில் உள்ள தனியார் கல்லூரி மாணவர்களுக்கு விற்பனை செய்தது தெரிய வந்தது. கஞ்சா மட்டுமின்றி அதிக விலை கொண்ட மெத்தம்பெட்டமைன் வகை போதைப் பொருட்களும் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதை போலீஸார் கண்டறிந்தனர். இந்த வழக்கு தொடர்பாக ஏற்கெனவே 7 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதற்கிடையே, காட்டாங்கொளத்தூர் பகுதியில் தங்கியுள்ள கல்லூரி மாணவர்களிடம் கஞ்சா ஆயில் டப்பாக்கள் இருப்பதாக ரகசிய தகவல் கிடைத்தது. அதன்படி, கடந்த மாதம் 30-ம் தேதி சென்னை தனிப்படை போலீஸார், காட்டாங்கொளத்தூர் சென்று அறையில் பதுங்கியிருந்த கல்லூரி மாணவர்கள் 2 பேரைக் கைது செய்து விசாரித்தனர். கேரளாவைச் சேர்ந்த அவர்களது அறையில் கஞ்சா ஆயில் உட்பட பல்வேறு வகையான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட செல்போன்களில் உள்ள எண்களைக் கொண்டு தனிப்படை போலீஸார் தொடர்ந்து துப்பு துலக்கினர். இதில் பிரபல நடிகர் மன்சூர் அலிகானின் மகன் அலிகான் துலக்(26) எண்ணும் இருந்தது தெரியவந்தது.



● அலிகான் துலக்

இந்நிலையில், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்த அலிகான் துலக்கை தனிப்படை போலீஸார் நேற்று கைது செய்து ஜெ.ஜெ. நகர் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர். அவருடன் மேலும் 3 பேரிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது.

சினிமா உதவி இயக்குநராகப் பணியாற்றி வரும் அலிகான் துலக், போதைப் பொருட்களை வேறு யாருக்கேனும் விற்பனை செய்தாரா என்ற கோணத்தில் விசாரணை நடைபெறுகிறது.

## டிச.18-ம் தேதி திமுக தலைமை செயற்குழு கூட்டம்

**நிர்வாக மாற்றங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் என தகவல்**

■ சென்னை

திமுகவின் தலைமை செயற்குழு கூட்டம் டிச.18-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ளது.

திமுகவில் தற்போது உள்ள நிர்வாக ரீதியிலான மாவட்டங்களை, 2 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என்ற வகையில் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மாவட்ட செயலாளர்கள் எண்ணிக்கையும், அதில் இளைஞரணியின் பிரதிநிதித்துவமும் அதிகரிக்கும் என திமுகவினர் கருதுகின்றனர். ஆனால், இதற்கு செயற்குழு, பொதுக்குழுவில் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது.

இதற்கிடையே, திமுகவின் பொதுக்குழு கூட்டத்தை, திருச்சியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், டிச.18-ம் தேதி காலை 10 மணிக்கு திமுகவின் தலைமை செயற்குழு கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுவதாகவும், கழக ஆக்கப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாகவும் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, திமுக நிர்வாகி ஒருவர் கூறும்போது, "திமுகவில் நிர்வாக ரீதியாக மாற்றம் செய்யப்படும்போது, அதற்கு செயற்குழுவில் ஒப்புதல் பெறப்பட வேண்டும். தற்போதுள்ள சூழலில் தேர்தல் பணிகள் தொடர்பாக ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் ஒப்புதல் பெறப்படும். அத்துடன், கட்சியின் ஆக்கப் பணிகள் மற்றும் தேர்தல் தொடர்பான பணிகள் குறித்து ஆலோசிக்கப்படும். இந்த தலைமை செயற்குழு கூட்டத்தில் மாவட்ட வாரியாக நிர்வாகிகள், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என 400 பேர் பங்கேற்பார்கள்" என்றார்.

எதிர்க்கட்சிகள் மீது ஏளனமாக விமர்சனம் வைத்து

## மக்களை நிர்க்கதிக்கு ஆளாக்கும் அரசு

**தவெக தலைவர் விஜய் கடும் விமர்சனம்**

■ சென்னை

புயல் மழை பாதிப்புகளை சுட்டிக்காட்டி தமிழக அரசின் செயல்பாட்டை தவெக தலைவர் விஜய் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பான அவரது சமூக வலைதள பதிவு:

எவ்வளவு பெரிய புயல், இயற்கைப் பேரிடர் வந்தாலும் நம்மைக் காக்க, நாம் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த அரசு இருக்கிறது, ஆட்சியாளர்கள் உள்ளனர் என்ற நம்பிக்கையுடன் தான் மக்கள் இருப்பர். ஆனால், குறைந்தபட்ச பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கூடச் செய்யாமல் அவர்களை பரிதவிக்க விடும் சுயநல ஆட்சியாளர்களை என்னவென்று சொல்ல?

மக்களைப் பாதுகாப்பாக இருக்க வைப்பதற்கான நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வது குறித்து அவர்கள் எள்ளளவும் சிந்திப்பதில்லை. காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் பாதுகாப்பு சார்ந்து எந்த ஒரு முன்னெடுப்பையும் எடுப்பதில்லை.

எவ்வகையிலாவது மக்களை ஏமாற்றி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்றும் எல்லாவற்றையும் மக்கள் மறந்துவிடுவர் என்றும் மமதையில் இருந்த எவரும் மக்கள் மன்றத்தில் நீடித்து நிலைத்ததே இல்லை. எது நடந்தாலும் எப்போதும் போல எதிர்க்கட்சிகள் மீது ஏளனமாக விமர்சனம் வைத்து, காவி வண்ணம் பூசி, கபட நாடகமாடித் தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணும் தற்போதைய ஆட்சியாளர்கள், எம் மக்களை நிரந்தர நிர்க்கதிக்கு ஆளாக்கி வருகின்றனர்.

பல மாவட்டங்களில் வெள்ள நீர் வடியவில்லை. மக்களின் வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ள நீர் முழுவதுமாக வடியும் வரை தவெகவினர், பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க வேண்டும். இவ்வாறு விஜய் தெரிவித்துள்ளார்.

solvakumar.m@hindutamil.co

## ப்ரோபா-3 செயற்கைக்கோள் இன்று ஏவப்படுகிறது

■ சென்னை

சூரியனை ஆராய்ச்சி செய்வதற்கான ப்ரோபா-3 எனும் இரட்டை செயற்கைக்கோள், பிஎஸ்எல்வி சி-59 ராக்கெட் மூலம் இன்று (டிச.4) விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஏவுதளத்தில் இருந்து ப்ரோபா-3 இரட்டை செயற்கைக்கோள் இன்று (டிச.4) மாலை 4.08 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது. புவியில் இருந்து 60,500 கி.மீ. தொலைவில் உள்ள சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டு அங்கிருந்தபடியே 2 செயற்கைக்கோள்களும் 150 மீட்டர் இடைவெளியில் அருகருகே பயணித்து சூரியனின் புறவெளிப் பகுதியை ஆய்வு செய்து தரவுகளை அனுப்பும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை தீவிரம்

## டிச. 9 வரை மிதமான மழைவாய்ப்பு

■ சென்னை

சென்னை மண்டல வானிலை ஆய்வுமைய இயக்குநர் பா.செந்தாமரைக்கண்ணன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வடதமிழக உள்பகுதிகளில் நேற்று முன்தினம் காலை நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி (ஃபெஞ்சல்) மாலை காற்றழுத்த தாழ்வு பகுதியாக வடதமிழகம், தெற்கு கர்நாடக உள்பகுதிகளில் நிலவியது. இது நேற்று காலை கடலோர கர்நாடக பகுதிகள் மற்றும் அதையொட்டிய மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக நிலவியது.

இதன் காரணமாக தமிழகத்தில் சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 9-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை, புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசானது அல்லது மிதமான மழை பெய்யக்கூடும்.

லட்சத்தீவு, அதையொட்டிய பகுதிகள், தென்கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு அரபிக் கடலின் தெற்குப் பகுதி உள்ளிட்ட பகுதிகளில் 7-ம் தேதி வரை மணிக்கு 35 முதல் 55 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, மீனவர்கள் இந்தப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கரூர் மாவட்டம் தோகைமலையில் 13 செ.மீ. மழை, கிருஷ்ணராயபுரம், ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர், திருப்பத்தூர், சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 10 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அரசு கல்லூரிகளில் கவுரவ விரிவுரையாளர்கள் நியமனம்

**உயர்கல்வி துறை அமைச்சர் கோவி செழியன் தகவல்**

■ சென்னை

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சார்பில் 'விளைவுகள் அடிப்படையிலான கல்வி' என்ற தலைப்பிலான பயிலரங்கம் சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து பேசியதாவது:

உயர்கல்வித் துறையில் தமிழக அரசு பல்வேறு புதுமைகளை செய்துவருகிறது. மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு 'நான் முதல்வன்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கற்றல், கற்பித்தல் தொடர்பான திட்டங்களை மேம்படுத்துவதே இந்த பயிலரங்கத்தின் நோக்கம்.

அதன்படி மாணவர்களுக்குத் தேவைப்படும் திறனறிவு கல்வி முறைகளை வகுக்க வேண்டும். அந்த திறனறிவுகள் மாணவர்களைச் சென்றடைவதற்கான கற்பித்தல் முறையை உருவாக்க வேண்டும். தொடர்ந்து கற்றல் கற்பித்தல் நிகழ்ந்த பின்னர் மாணவர்களுக்கு கற்பித்தவைகள் சென்று சேர்ந்துள்ளனவா என்பதை உறுதிசெய்ய தேர்வு நடத்தப்பட வேண்டும். அடுத்ததாக கல்வி முறையில் மேலும் முன்னேற்றம் செய்வது குறித்து கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்த 4 படிகளையும் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை வரையறுக்க இந்த பயிலரங்கம் உதவிசெய்ய வேண்டும்.

அதன்படி கல்வி முறையால் மாணவர்கள் திறமை, தன்னம்பிக்கை பெற்று தொழில் முனைவோர்களாக மாறவேண்டும். இதுபோன்ற பயிலரங்கங்கள் பல்கலைக்கழகங்களிலும், மண்டல, கல்லூரி அளவில் விரிவுபடுத்தப்படும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்வில் உயர்கல்வித் துறை செயலர் கே.கோபால், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணைத்தலைவர் எம்.பி. விஜயகுமார், தொழில்நுட்பக் கல்வித் துறை இயக்குநர் டி.ஆப்ரகாம், கல்லூரி கல்வி இயக்குநர் இ.சுந்தரவல்லி, பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது;

கவுரவ விரிவுரையாளர்களுக்கு சம்பளமாக ரூ.50,000 வழங்க வேண்டுமென யுஜிசி வலியுறுத்துகிறது. நிதிச் சுமைக்கு இடையேயும் தமிழகத்தில் கவுரவ விரிவுரையாளர்களுக்கு ரூ.25,000 தரப்படுகிறது. அதேநேரம் கவுரவ விரிவுரையாளர் சம்பளம் நிதியாக யுஜிசி ஆண்டுக்கு ரூ.40 கோடி தரவேண்டும். 2017-ல் நிறுத்தப்பட்ட இந்த தொகை இதுவரை வழங்கப்படவில்லை.

இருப்பினும், மாணவர்களின் கல்வி நலன் கருதி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவுரவ விரிவுரையாளர்களை நியமித்து பணியைத் தொடர்கிறோம். மேலும், தேவைக்கேற்ப கூடுதல் கவுரவ விரிவுரையாளர்களை விரைவில் நியமிக்கவும் முடிவு செய்துள்ளோம். அதனுடன் நிரந்தர பேராசிரியர்களை உருவாக்கவும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர் இன்றி இருப்பதற்கு யார் காரணம் என்பது அனைவருக்கும் தெரியும். இருப்பினும், மாணவர்களின் நலன் கருதி, அதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சார்பதிவு அலுவலகங்களில் நாளை கூடுதல் டோக்கன்

■ சென்னை

கார்த்திகை மாத முகூர்த்த தினத்தில் அதிகளவில் பத்திரப்பதிவுகள் நடைபெறும் என்பதை கருத்தில் கொண்டு, டிச.5-ம் தேதி பதிவுக்கு கூடுதல் டோக்கன்கள் வழங்கப்படும் என்று பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சுபமுகூர்த்த தினங்களில், அதிகளவில் பத்திரப்பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்று, பதிவுக்கான கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கப்படுவது வழக்கம். தற்போது கார்த்திகை மாதத்தின் சுபமுகூர்த்த தினமான டிச.5-ம் தேதி (நாளை) அதிகளவில் பத்திரப்பதிவுகள் நிகழும் என்பதால், கூடுதலாக முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கும்படி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

இதை ஏற்று, டிச.5-ம் தேதி ஒரு சார்-பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100-க்கு பதிலாக 150 டோக்கன்கள், 2 சார்-பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 200-க்கு பதிலாக 300 டோக்கன்கள், அதிகளவில் பத்திரப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களில் 100-க்கு பதிலாக 150 சாதாரண டோக்கன்கள் மற்றும் ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு டோக்கன்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Rane

**ரானே பிரேக் லைனிங் லிமிடெட்**

CIN No.L63011TN2004PLC054948

பதிவு அலுவலகம்: 'மைத்ரி', 132, கதீட்ரல் சாலை, சென்னை 600 086.

www.ranegroup.com; e-mail: investorservices@ranegroup.com; Tel.: 044 28112472 / 73

**IEPFக்கு ஈக்விட்டி பங்குகளை கட்டாயமாக மாற்றுவதற்கான அறிவிப்பு**

2013, நிறுவனங்கள் சட்டம், பிரிவு 124 (6) உடன் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கில், தணிக்கை மாற்றம் மற்றும் பணத்தை இருப்பிச் செலுத்தல்) விதிமுறைகள், 2016 (விதிகள்) என்பதன்படி அறிவிக்கப்படுவது என்னவென்றால், பங்குதாரர்கள் அவர்களுடைய ஈவுத்தொகையை ஏழு தொடர்ச்சியான ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக, கோரப்படாத அல்லது செலுத்தப்படாத நிலையில் இருந்தால் அவர்களுடைய பங்குகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) ஆணையத்திற்கு நிறுவனம் மாற்ற வேண்டும்.

விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க, ஈவுத்தொகை உரிமை கோரப்படாத மற்றும் பங்குகள் மாற்றப்பட வேண்டிய பங்குதாரர்களுக்கு தனிப்பட்ட தகவல் தொடர்புகள் அனுப்பப்பட்டு, அத்தகைய பங்குதாரர்களின் விவரங்கள் மற்றும் பங்குகளின் எண்ணிக்கையுடன், www.ranegroup.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட வேண்டிய பங்குகள் மற்றும் பணமாக்கப்படாத ஈவுத்தொகை விவரங்களை சரியாக்க பங்குதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**2017–18 வருடத்திற்கு IEPFக்கு மாற்ற வேண்டிய ஈவுத்தொகை (இடைக்காலம்) மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குகளுக்கு மார்ச் 06, 2025–ஆம் தேதிக்கு பின் 30 நாட்களுக்குள்ளாக என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.** அத்தகைய ஈவுத்தொகையை பெற வேண்டிய சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள், இந்நிறுவனம் அல்லது இந்நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் மாற்ற முகவரைக் தொடர்பு கொண்டு ஒரு விண்ணப்பத்தை சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

இது சம்பந்தமான பங்குதாரர்களிடமிருந்து வரம்பு தேதி வரையில் எந்தத் தகவலும் பெறப் படவில்லையெனில் IEPF விதிமுறைகளின்படி, தேவையான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், பங்குகளை IEPF ஆணையத்திற்கு இவ்வாறு மாற்றப்படும்:

(i) சான்றிதழ் அல்லாத மின்னனு வடிவில் பங்கு வைத்திருக்கும் பங்குதாரர்கள் கவனிக்க: IEPF ஆணையத்திற்கு மின்னனு கணக்கிற்கு பங்குகள் நேரடியாக அனுப்பப்படும்.

(ii) சான்றிதழ் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள்: புதிய சான்றிதழ்களை வழங்கி மின்னனு வடிவில் மாற்றி IEPF ஆணையத்திற்கு மின்னனு கணக்கிற்கு மாற்றப்படும்.

IEPF விதிகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களை கருத்தில் கொண்டு, புதிய பங்கு சான்றிதழ்(கள்) வழங்குதல் தொடர்பான நிறுவனத்தின் போதுமான அறிவிப்பாகவும் கருதவேண்டும்.

அதன்பின்னர் கூறப்பட்ட விதிகளுக்கு ஏற்ப IEPF–க்கு பரிமாற்றம் செய்யப்பட்டுள்ள ஈவுத்தொகை மற்றும் பங்குகள் தொடர்பாக கம்பெனிக்கு எதிராக எந்தவிதமான உரிமைகோரலும் ஏற்கப்படாது. IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட்ட உரிமை கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் அதன் தொடர்பான பங்குகள் அப்பங்குகளில் கிடைக்கப்பெறும் நன்மைகள் ஏதேனும் இருந்தால் IEPF ஆணையத்திலிருந்து, விதிமுறைகளில் குறிக்கப்பட்டுள்ள செயல்முறையைப் பின்பற்றி உரிமை கோரலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

இந்த அறிவிப்பு தொடர்பாக பங்குதாரர்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் மாற்ற முகவரைக் தொடர்பு கொள்ள: Integrated Registry Management Services Private Limited, SEBI பதிவு எண் INR 000000544, இரண்டாவது மாடி, கென்செஸ் டவர்ஸ், எண் 1, ராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017, தொலைபேசி : 044–28140801 –03, மின்னஞ்சல் : srirams@integratedindia.in

ரானே பிரேக் லைனிங் லிமிடெடிற்காக
வெங்கட்ராமன்
செயலாளர்

இடம்: சென்னை
தேதி: டிசம்பர் 03, 2024